வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

SAGARMALA
PORT-LED PROSPERITY

Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 &
ISO 45001:2018 and ISPS compliant Port

Global Connect
Fax : 91-461-2352232
Email id : provocport@gmail.com
Website : www.vocport.gov.in

Press release no: 9 Date: 11.01.2025

**V.O. Chidambaranar Port achieves remarkable growth in Edible Oil Handling**

V.O. Chidambaranar Port, the vibrant seaport located in the southern India is handling a wide array of cargoes like Coal, Containers, Limestone, Windmill blades & accessories, Fertilizers & raw materials, Construction material, edible oil, including palm oil and Sunflower oil. The Port's commitment to enhancing its operational capacity and facilitating smooth trade has led to impressive growth in edible oil handling over the years.

In this financial year 2024-25 upto December 2024, the Port has handled 3,73,393 tonnes of edible oil (2,97,132 Tonnes of palm oil and 76,261 Tonnes of sunflower oil), compared to 3,09,229 tonnes during the same period in the previous year, achieving an impressive 20.75% growth.

As part of the Port-led development initiative under the Coastal Employment Unit, envisioned by the Sagarmala program of the Ministry of Ports, Shipping, and Waterways, the Port provides land to support various port-based industries.

One of the key beneficiaries, Kaleesuwari Agro Industries Private Limited, has established a refinery plant and storage tanks on Port land. Crude edible oil, sourced from countries such as South Korea, is refined, stored, and packaged here for domestic consumption.

Additionally, KTV Health Food Pvt. Ltd. has set up dedicated storage tanks exclusively for crude and refined palm oil. Crude palm oil, imported from Indonesia and Malaysia, is transported through pipelines to their refinery in Tuticorin SIPCOT, where it is refined and packaged for domestic use.

Commending the achievement, Shri Susanta Kumar Purohit, IRSEE, Chairperson, stated that this achievement underscores the trust and confidence of our stakeholders, the dedication of our workforce, and the strategic vision driving our Port's development. By providing state-of-the-art infrastructure and seamless connectivity, we have enabled our partners, to thrive and contribute to this remarkable growth.

The above details were released in a Press Release by V. O.Chidambaranar Port Authority, today.

Public Relations Officer

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu
Fax : 91-461-2352232
Email id : provocport@gmail.com
Website : www.vocport.gov.in

SAGARMALA PORT-LED PROSPERITY
Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 & ISO 45001:2018 and ISPS compliant Port
Global Connect

பத்திரிக்கை செய்தி எண் : 9 தேதி : 11.01.2025

**வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் சமையல் எண்ணெய் கையாளுவதில் சாதனை**

இந்தியாவின் முன்னணி துறைமுகங்களில் ஒன்றான தென்பகுதியில் அமைந்துள்ள வ.உ.சிதம்பரனார் துறைமுகம் நிலக்கரி, சரக்குபெட்டகங்கள், சுண்ணாம்புக் கல், காற்றாலை இறகு மற்றும் அதன் உதிரிபாகங்கள், உரம், கட்டுமான பொருட்கள், பாமாயில், சூரியகாந்தி எண்ணெய் மற்றும் சமையல் எண்ணெய் ஆகிய சரக்குகளை சிறந்த முறையில் கையாண்டு வருகிறது. துறைமுகத்தின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தவும், சுமூகமாக வர்த்தகத்தை எளிதாக்கவும் சிறந்த முறையில் செயல்பட்டு வரும் வ.உ.சிதம்பரனார் துறைமுகம் சமையல் எண்ணெய் கையாளுவதலில் ஈர்க்கத்தக்க வளர்ச்சியைப் பெற வழிவகுத்துள்ளது.

வ.உ.சிதம்பரனார் துறைமுகம் இந்த நிதியாண்டு 2024-25 டிசம்பர் வரை 3,73,393 டன் சமையல் எண்ணெயை கையாண்டு (இதில் 2,97,132 டன் பாமாயில் மற்றும் 76,261 டன் சூரியகாந்தி எண்ணெய் அடங்கும்) இதற்கு முந்தைய நிதியாண்டு 2023-24 டிசம்பர் 2023 வரை கையாண்ட அளவான 3,09,229 டன்களை ஒப்பிடுகையில் 20.75 சதவிகிதம் அதிகமாக கையாண்டு சாதனை படைத்துள்ளது.

மத்திய கப்பல், துறைமுகங்கள் மற்றும் நீர்வழிபோக்குவரத்து அமைச்சகத்தின் சாகர்மாலா திட்டத்தின் கீழ் வ.உ.சிதம்பரனார் துறைமுகத்திலுள்ள கடலோர அபிவிருத்தி திட்டத்தின் (Coastal Employment Unit) மூலம் துறைமுகம் பல்வேறு துறைமுகம் சார்ந்த தொழிற்சாலைகள் அமைப்பதற்கு தேவையான நிலங்களை வழங்கி வருகிறது. இவற்றில் பயனாளிகளில் ஒன்றான Kaleesuwari Agro Industries Private Limited என்னும் நிறுவனத்திற்கு சுத்திகரிப்பு ஆலை மற்றும் சேமிப்பு தொட்டி அமைப்பதற்காக நிலம் ஒதுக்கியுள்ளது. இந்த வளாகத்தில் தென்கொரியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சூரியகாந்தி எண்ணெய் சுத்திகரிக்கப்பட்டு, சேமிக்கப்பட்டு அதன் பிறகு தென்னிந்தியாவின் பல்வேறு இடங்களுக்கும் விநியோகிக்கப்படுகிறது. இது இந்த பிராந்தியத்திற்கு நிலையான சமையல் எண்ணெய் விநியோகத்தினை உறுதி செய்கிறது.

மேலும், வ.உ.சிதம்பரனார் துறைமுகமானது K.T.V. Health Food Pvt. Ltd. என்னும் நிறுவனத்திற்கு கச்சா மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் எண்ணையை சேமிப்பதற்காக நிலம் வழங்கியுள்ளது. இந்தோனேஷியா மற்றும் மலேசியா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு இங்கு சேமிக்கப்படும் பாமாயில் சுத்திகரிப்புப் பணிக்காக தூத்துக்குடியிலுள்ள SIPCOT -ல் அமைந்துள்ள அவர்களது சுத்திகரிப்பு ஆலைக்கு கொண்டு செல்லப்படுகிறது. அவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் எண்ணெய் உள்நாட்டு பயன்பாட்டிற்காக விநியோகிப்படுகிறது.

திரு சுசாந்த குமார் புரோகித், இ.ர.ப.மி.பொ, வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத் தலைவர் அவர்கள் இச்சாதனை துறைமுக உபயோகிப்பாளர்கள் துறைமுகத்தின் மேல் வைத்திருக்கும் நம்பிக்கைக்கும், துறைமுக ஊழியர்களின் சிறப்பான செயல்பாட்டிற்கும் ஒரு எடுத்துகாட்டாக விளங்குகிறது. மேலும், துறைமுகத்தின் உள்கட்டமைப்பு மற்றும் சீர்மிகு போக்குவரத்து இணைப்புகள் இத்தகைய சாதனைகள் புரிவதற்கு வழிவகுக்கின்றன என்று கூறினார்.

மேற்சொன்ன தகவலை வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி